உ

கடவுள் துணை.

வைத்தியநாதர்கோயிலென்றுவழங்கும்

புள்ளிருக்குவேளூர்த்

# தையனாயகியம்மை பதிகம்.



சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

22

சிவமயம்.

புள்ளிருக்குவேளூர்த்

# தையநாயகியம்மை பதிகம்.

காப்பு நேரிசைவெண்பா.

நீர்வளங்களெப்பொழுது நீங்காதவேளூர்வாழ்
நார்வளங்கொளெங்கள்தைய ஞயகிமேற்-சீர்விளங்
குஞ் செந்தமிழ்ப் பாமாலைசொலச் செல்வக்கணேச
ணரவிந்தமலர்த் தாள்துணையாமே.

ஆசிரியவிருத்தம்.

திருவளர்ந்தோங்குமதி வதனமுஞ் சுகவருட்டி
றம் வளர்ந்தோங்குவிழியுஞ், சீர்வளர்ந் தோங்கு
மறை மொழிசொலும்பவளவு சிதம்வளர்ந்தோங்கு
வாயும், உருவளர்ந்தோங்குமணி மருவுகுழையாதி
யணி யொளிவளர்ந்தோங்குசெவியும், உன்னதம்வள
ர்ந்தோங்கு கனசுவர்க்கங்களும்உரம்வளர்ந்தோங்கு
தோளும், மகுவளர்ந்தோங்குபூங் கரமும்விண்டரு
மலரின் மணம்வயர்ந்தோங்குதாளும், மைந்தனேன்
காணவெள்விடையினின் பதியொடும் வந்தருளசே
வைதருவாய், தருவளர்ந்தோங்குபொழி லினகண்
மாமயில்கணிர்த்தனமோங்குவேளூரில்வாழ், தைய

மால்வரைகுமரிவை யம்பாவையுமுதவு தையனாகிய
கௌரியே. 1

அருள்பெருகு நயனஸ்ரீரீங் காரிமதியணிவேணி
யணிமணிப்பூணிவிமலி, ஆனந்தபயிரவி திரிபுராந்தகி
சுகிணி யகிலகாரணிநாரணி, மருளறுந்திவ்யத்ரிகோ
ணியம்புஜபாணி மாதங்கிமரகதாங்கி, மந்த்ரபஞ்
சாட்சரிமகேஸ்வரிமனோன்மணி மருவுமெய்ஞ்ஞான
சீலி, தெருளிலகும்வேதமுடி மீதிலுறும்வித்தகி
தீராதவினைகளெல்லாந் தீர்த்தருள் வைத்யநா தன்பங்
கிலன்னையே சிறியனேன்வினைதவிர்த்தாள், தாள
மணிமுறுவன் மடமாதர்பாலன்னநடை தான்பயி
லும்வேளூரில்வாழ், சையமால்வரைகுமரி வையம்
பாவையுமுதவுதையனாயகிகௌரியே. 2

ஆறெணுந்தையலை யணிந்தவேணிப்பிராற் கன்று
குருமூர்த்தியாகி, ஐந்தையலைபாதடங் கித்தவம்புரி
வர்களிந்நான்கு தையலைப்பொன், கூறவாவொழிய
வொளி வீசுமுத்தையலை கொழிக்குநற்செந்தின்முத
லங்கோலநார்மேவியிரு வையலைப்புறமதிற்கொண்டு
மொருதையலைத்தாங், தேறும்படிச்செய்து வெட்டு
ண்டகையையுஞ் சீருறத்தந்தவமல, சிவசுப்ரமண்ய
முத்தையனைப்பெற்றமா தேவியேயெனையாளுவாய்,
தாறுடைக்கமுகுபூந் தாழையெனநீடித் தழைத்து

வளர் வேளூரில்வாழ்; சையமால்வரைகுமரி வையம் யாவையுமுதவு தையனாயகிகௌரியே. 3

ஆகமபுராணகலை யோதியறியேன்சுருதி யாய்ந்த வரையண்டியறியேன், ஆனநின்மெய்யன்பர் நேசம றியேனினக் கரம்பூசைசெய்துமறியேன், தேகம தெடுத்திது வரைக்குணற்கருமங்கள் சிந்தையினினை த்து மறியேன், சிலபுண்யணிஞ் செய்குவோர்கள்பா லொருகாசு செங்கையாலீய்ந்துமறியேன், பாகமுத மொழிநலார் மோகமேசரியென்னும் பாமாரிலென் போனுமிப், பாரிலெவருண்டுநன் மார்க்கநிலையே பெறப் பண்ணுவதுனக்கருமையோ, தாகமூன்றுந் தணந் தோங்குமுநிவரர்கள் வாசஞ்செயும்வேளூ ரில்வாழ் சையமால்வரைகுமரி வையம்யாவையு முதவு தையனாயகிகௌரியே. 4

நாயேன்படுந்துயர மிவ்வளவெனப்பகர நாவொன் றுபோதாதுமேல்; நாடிவந்தென்குறை யுகற்றுவார் நீயலால் நானிலத்தொருவரில்லை, பேயேனுமொரு போதகங்கரையுநின்னகம் பெரும்பாறையோவிரும் போ, பெற்றிட்டபிள்ளை மேற்றுய்க்கலோநாடோ றும்பிரியமதிக்கவேண்டும், நீயே துமறியாது போலி ருப்பதுவுமொருநியாயமோதயவில்லையோ, நெஞ்சத் துநினைவையே லணுவுமகமேருவாய் நிமிடத்திலா மிடாதோ, தாயேநின்னுதரவு நம்பினேனருள்புரி

வைதரணிபுகழ் வேளூரில்வாழ், சையமால்வரைகு மரி வையம்யாவையுமுதவுதையனாயகிகௌரியே. 5

அடுத்தவர்கடம்மையொரு நிமிடமுங்கைவிடா தாண்டருள்நீதியெனவே, வாகமபுராணகலை தன்னினிசொன்னதென் றறிஞராற்கேட்டுமிகவுந், திடத்துடனுனதுபதம் நம்பிவந்தண்டினேன் சீற்றமதுறு மலினிய, திருவுளமிரங்கியெனையாதரித்திடுவதுசிறந் தவுன்கடமையலவோ, குடத்துநீரையுமொரு குளத்துநீரென்பரோ குவலயத்துன்னடிமையைக், கூறும்வேறொருவர்தம் மடிமையென்பார்களோ குணகரி மகாவித்தகி, தடத்துதிருமாம்பலெழின்மாதர்வெண் ணகைகண்டு தாமமலரும்வென்றில்வாழ், சையமால் வரைகுமரி வையம்யாவையுமுதவு தையனாயகிகௌ ரியே. 6

கருணைக்குவித்தா யிருப்பதுந்துயரைக் களைந் தினிக் குறைவாமற், காத்தன்பர்தமை யிரட்சிப் பதும் பொய்யல்லகருதுன் னியற்கைக்குணம், வருணக்கலாபமயில்வடிவுற்ற வல்லியென்று வறுமை பிணிதுயரம்யாவும், மாற்றிநித்தியசெல்வம் அருள் வையெனநிதகான்வருந்திநின்பானுரைக்க, இருணு குமொளிவயிரகுண்டல மிலங்குசெவியிற் கேட்டிடாதிருத்தால்என், பொலாக்கன்மமோ ஈதுகலி காலத்தியற்கையோ வடிமையலவோ, தருணத்திலு

தவிசெய்யாததுந்தகுதியோ தண்ணருள்செய்வேளூ ரில்வாழ், சையாமல் வரைகுமரிவையம் யாவையு முதவுதையனாயகி கௌரியே. 7

அன்னையே நீமுனஞ்செய்திட்ட நாலெட்டறத் தனின்மருந் தென்பதோ, ரறமான தஃதனறிநின் கணவனும் அடுத்தவர்கள் நோய்தீர்ப்பரென், றின் னில்மெலாஞ்சொல்ல விவ்வடிமையேன்றனது இன் னல் நோய்தீர்த்திடாத, தென்னவிதமோ தருமருந் தினிற்சாரமதுமில்லையோ மண்மருந்தோ, மன்னுநீ தருமச்சொரூபியென்றும் பதிவைத்யநாதீசரென் றும், வாய்ந்த பேரகொண்டதுவும் ஏதுகாரணத் தினை வாய்மலர்ந்தருளவேண்டும். தன்னிகரிலட்டா ங்கயோகியர்கள் வந்துதுதிசாற்றுநல்வேளூரில்வாழ் சையாமல்வரைகுமரிவையம் யாவையுமுதவுதைய னாயகிகௌரியே. 8

தந்தொடுந் தம்பெரிய தனமதைக்காட்டித்தம க்குரியபணிகள்செய்யத், தகுதொழிற் காட்டிமிஞ் சாதடக்கிக் கொடியசங்கடங்காட்டிமிகவும், வெந்த புண்ணிற்கோலை யிட்டதைப்போலவே வீண்வம்பு வார்த்தைகாட்டி, வீரமுள்ளோர்மனதும் நையும் வகைசெய்யு மைவிழியார்கள் மீதுவாஞ்சை, எந்த விதமுங் கொளாதுனதுபய சரணமலரிடைவிடா தேத்தும்வாமே, ஏழை யற்கிந்துகரத் தருள்செய்ய

வேண்டும் இலங்கிநித்தியகல்யாணி, சந்தமுறவந்த ணருவந்துநன்மறைகள் சந்ததமோதும் வேளூரில் வாழ்; சையமால்வரைகுமரி வையம்யாவையுமுதவு தையனாய்கிகௌரியே. 9

சுரர்களொரு பாற்போக பூமியாளொருபாற் றுறந்த முனிவரர்களொருபாற், றுறங்கவிஞ்சையர் களொருபா லசுரரொருபாற் றுலங்குமந்தரர்களொ ருபால், உரகரொருபாற் றயித்தியர்களொருபாலி சையிலோங்குகாந்தருவ ரொருபால், உத்தமவியக்க ரொருபாற்சித்தரொருபா லுவந்தகின்னரர்களொரு பாற், கருடரொருபாற் கிம்புருடர்களொருபாற்பெ றுங்கனவாசியர்களொருபாற், கறைகொள பைசாச ரொருபாற் புதரொருபாற்கடூரமனநிருதரொருபாற் றரமொடுதுதிக்கநற்சேவை தருநினபெருமை சாற் றரிதுவேளூரில்வாழ்; சையமாமல் வரைகுமரிவை யம் யாவையுமுதவுதையனாயகி கௌரியே. 10

நலமிகுவிளங்குசீ காழியி லுதித்ததிரு ஞானச ம்பந்தமூர்த்தி, நவிலரியமெச்சிலா நந்தமேவத்துங்க நகமுலைப்பாலனித்த, சலசலோ சனபாலகந்தரிமகா மந்த்ரதந்த்ர வெந்த்ராடம்பரி, சயிலபுயமார்வைத் தியநாதர் பாரிபூந்தாரியொய்யாரிவீரி, பலனுகவு நின்னுடைய சரணம்புயத்தினற் பரிவுன் சாத்து மிந்தப் பாமாலையைப்புனைந் தருள்செய்யவேண்டும்

பவானியுயர்செகதீஸ்வரி, தலைமைபெறுமோங்காரி கருணாசமுத்ரியே தருபுகழ்கொள் வேலூரில்வாழ் சையமால்வரைகுமரிவையுமுதவு தையனாயகிகௌரியே. 11

சட்டளைக் கலித்துறை.

நான்கொண்ட கற்பகக்காமலர் நின்பூங்கழற் கணிதம், வான்கொண்ட தேவர்களர்ச்சித்து வாழத்தலாமளிக்குந், தேன்கொண்டமெனமொழிப் பாவாய்விதித்தவிச்சென்மத்தினில், நான்கொண்டசஞ்சலந்தீர்த்தருள்வாய் தையனாயகியே.

புற்றரவப்பணி வேணிப்பிரான் முப்புராதிபுரையுற்றக்கைப்பி லெரித்தபிரான்றோலுரித்துடுக்குங் கொற்றமிகுமெம்பிரான் பானீயென்றுங்குலவுநற்கு நற்றவமெத்தனை செய்தனளோ தையனாயகியே

பொன்னேயப் பொன்னினொளியே சகலபுவனத்திற்கும், அன்னேயறஞ்செயுமம்பிகையே யிருளாற்றொளிறும், மின்னேய மாணிக்கமேமதி மாமுகவித்தகிநீ, நன்னேசங்கொண்டேனை யாண்டருள்வாய் தையனாயகியே.

தையனாயகியம்மை பதிகம்

முற்றுப்பெற்றது.

---